### சி.பி.எஸ்.இ. தேர்வு குளறுபடிகளால்

# மாணவர்களின் எதிர்காலத்தை இருண்ட காலமாக மாற்றியுள்ள ஒன்றிய அரசு!

## மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்,எச்.ஜவாஹிருல்லா கண்டனம்!



சென்னை, ஜுன்.2-
மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE), இந்த ஆண்டு 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு விடைத் தாள் திருத்துவயதற்காகப் புதிய மின்னணு மதிப்பீட்டு முறையான 'திரைவழி மதிப்பீட்டு முறையை' (OSM On Screen Marking) அறிமுகப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக விடைத் தாள்கள் ஸ்கேன் செய்யப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றிய பிறகு ஆசிரியர்கள் அதனை மதிப்பீடு செய்வார்கள் என்று கூறப்பட்டது.

இந்த ஆண்டு அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்ட விடைத்தாள்களில் 13,000 தாள்கள் வாசிக்க இயலாத அளவிற்கு இருந்ததாகவும் அதனால் கைகளால் திருத்தப்பட்ட தாகவும் தெரிய வருகிறது.

இதனால் பல மாணவர்கள் மிகக் குறைந்த மதிப்பெண்களைப் பெற்றதும் அதிக அளவில் தேர்ச்சி விகிதம் குறைந்தும் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பல மாணவர்கள் மறு கூட்டலுக்கு விண்ணப்பித்த போது விடைத்தாள்கள் முறையாக திருத்தப்படாதது அம்பலமாகி இருக்கிறது.

கடுமையாக உழைத்து படித்த மாணவர்கள் ஐ.ஐ.டி. என்.ஐ.டி. போன்ற உயர் படிப்புகளுக்கு செல்ல முடியாத சூழலை ஒன்றிய அரசு உருவாக்கி இருக்கிறது.

சி.பி.எஸ்.இ. ஆன்ஸ்கிரீன் மார்க்கிங் மதிப்பீட்டு டெண்டரில் தனியார் நிறுவனத்திற்கு ஆதரவாக விதிகள் தளர்த்தப்பட்டதாக ஜார்கண்ட் மாணவர் ஒருவர் ஆதாரங்களுடன் குற்றம் சாட்டியுள்ளதை புறம் தள்ள முடியாது.

ஒன்றிய கல்வி அமைச்சரும் சி.பி.எஸ்,இ. விடைத் தாள் குளறுபடியில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் மாணவர்களின் எதிர்காலத்தை சீர்குலைத்ததற்கு தார்மீக பொறுப்பேற்று பதவி விலக வேண்டும்.

நீட், சிபிஎஸ்இ. எஸ் எஸ்சி, கியூட் ஆகிய 4 தேர்வுகளிலும் குளறுபடிகள் நடைபெற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படுவது தென்னிந்தியாவை சேர்ந்த மாணவர்களாகவே இருப்பதும் கவனத்திற்குரியது. நுழைவுத் தேர்வுகள் அவசியமற்றவை என்பதற்கு இது மற்றொரு சான்று.

இவ்வாறு எம.எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை. ஜுன்2
முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை கழகத்தலைவர் தளபதி, கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களோடு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதும் எழுச்சியோடு கொண்டாடுவோம் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபப்பாண்டியன் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார் .

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது ,

"உலகம் முழுவதிலும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், மூத்த மொழியாம் தமிழ்மொழி செம்மொழி தகுதியைப் பெற்று இன்று பட்டொளி வீசி பறப்பதற்கும் காரணமாயிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை தலைமைக்கழகத்தின் வழிகாட்டுதல்களோடு ஜுன் 3ம் தேதி முதல் எழுச்சியோடு கொண்டாடப்பட விருக்கிறது

உலகத்தலைவர்களில் தாம் போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்ற ஒரே தலைவராய் , தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பியாய் திகழும், ஒப்பாரும் மிக்காரும் இல்லா தலைவராம் கலைஞர் அவர்கள், தமது 14ம் வயதில், திருவாரூரில் தொடங்கிய பொதுவாழ்வு பயணத்தில், எத்தனையோ சாதனைகளை படைத்து உயர்ந்து இருந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட அந்த மகத்தான தலைவரின் 103 வது பிறந்தநாளை, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் முழுவதிலும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், கிளை மற்றும் வார்டுகள், கழகங்கள் தோறும் கழக கொடி ஏற்றியும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடுவதோடு, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள், மாணவ, மாணவிகளுக்கு கல்வி கற்க உதவிகள் வழங்குதல், விளையாட்டுப்போட்டிகள் , இலக்கிய போட்டிகளை நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை, இந்த வருடம் முழுவதும் நடத்தி கலைஞர் எனும் மாமனிதரின் புகழ் பாடுவோம்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.




